[2013 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 322, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

322—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

*__9599—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:__

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, வடுகப்பட்டி கிராமம், சென்னாக்கல்புதூரில் அதிக கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, வடுகப்பட்டி கிராம ஊராட்சி எல்லைக்குட்பட்ட சென்னாக்கல்புதூர் கிராமத்தில் தற்போதைய மக்கள் தொகைக்கேற்ப 15 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, சங்ககிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் ஏற்றப்பட்டு சீராக விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில், மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

2013 ஏப்ரல் 26]

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன், சங்ககிரி ஒன்றியம், வடுகப்பட்டி ஊராட்சி, சென்னாக்கல்புதூரில் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள 15 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் தற்போது அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது அங்கு குடியிருப்புகள் அதிகரித்துவிட்ட காரணத்தினால், அப்பகுதி மக்களுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. தாயுள்ளம் கொண்ட நம் தங்கத் தலைவி, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இதைக் கனிவுடன் பரிசீலித்து மேற்கண்ட சென்னாக்கல்புதூருக்கு 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னாக்கல்புதூர் கிராமம் என்பது மிகச் சிறிய கிராமம். சுமார் 300 மக்கள் தொகையைக் கொண்டுள்ள கிராமம். ஏற்கெனவே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாகவும் அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றப்பட்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், 7 H.P. திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட கிணற்றிலேயிருந்தும் தண்ணீர் ஏற்றப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, கூடுதலாக நீர் தேவைப்படுகின்ற பட்சத்தில், அங்கே புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவை இருப்பின் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக்

கொடுக்கப்படும் என்று கூறினார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் சங்ககிரி ஒன்றியம், அன்னதானப்பட்டி ஊராட்சி, அனுசட்டிப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்து, இடிந்து விழும் சூழ்நிலையில் உள்ளது. அதை இடித்துவிட்டு, அதற்குப் பதிலாக 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைப் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்து பயன்படுத்தப்படாமல் இருந்தால் நிச்சயமாக அதை மாற்றி புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதோடு, இப்போது இயற்கை நமக்கு இடர்ப்பாடாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற எல்லா குடியிருப்புகளுக்கும் கூடுதலாகக் குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக, எங்கெங்கெல்லாம் நீராதாரங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அந்த நீராதாரங்களைப் பயன்படுத்தி எல்லா பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையோடு பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை வழங்கி வந்து கொண்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி, எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 327 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்குக் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. தற்போது இத்திட்டத்திற்கு ஒப்புந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தலைமையிடத்தில் பரிசீலனையில்

2013 ஏப்ரல் 26]

உள்ளன. இத்திட்டம் நிறைவேற்றப்படும்போது, சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்திற்குட்பட்ட 138 குடியிருப்புகளுக்கும் முழுமையாக குடிநீர் வழங்கப்படும். மேலும், இத்தொகுதியில் சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்தில் 19 குடியிருப்புகளுக்கும், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 6 குடியிருப்புகளுக்கும் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 8 குடியிருப்புகளுக்கும் தனி மின்விசைத் திட்டம்கூட செயல்படுத்தப்பட உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பரங்குன்றம் தொகுதி, மதுரை மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ளது. 58—வது வார்டு சிந்தாமணி பகுதியில் உள்ள பழைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளது. அதை அப்புறப்படுத்திவிட்டு, புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடுதலாக ஒரு தகவலைக் கூறினால் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். 58—வது வார்டு சிந்தாமணி பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளது என்று கூறியிருக்கிறார். அப்படிப் பழுதடைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் குடிதண்ணீர் ஏற்றப்படுகிறதா, இல்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினால், உடனடியாக தண்ணீர் ஏற்றும் வகையில் அது பழுதுபார்க்கப்படும். அப்படி ஏற்ற இயலாமல் முழுவதுமாக பழுதடைந்திருக்கிறதென்று சொன்னால், அதை அகற்றிவிட்டு புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித்

தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி தெரிவிப்பது, முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூர் பேரூராட்சியில் 7, 8, 9, 10, 11 ஆகிய வார்டுகளில் தண்ணீர் வசதியில்லாத நிலை உள்ளது. பேரூராட்சியின் மோசமான நிலையை கருத்தில் கொண்டு, ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்துக் கொடுத்து அந்தப் பகுதி மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, அது பேரூராட்சிகளானாலும் சரி, நகராட்சிகளானாலும் சரி, எல்லா இடங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, சில இடங்களில் அந்தக் குழாய்கள் முறையாக சரிசெய்யப்படவில்லையென்று சொன்னால் மேட்டுப் பகுதிகளில் தண்ணீர் ஏறாமலிருந்துவிடும். அழுத்தமான தண்ணீர் வருகின்றபோது மட்டும்தான் அந்த மேட்டுப் பகுதிக்குத் தண்ணீர் போகும். அழுத்தம் குறைவாக வருகின்ற பட்சத்தில், அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் போகாமல் இருந்துவிடும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பேரூராட்சியில், அதை ஆய்வு செய்து அதற்கேற்றவாறு குழாய்களை மாற்றி அமைத்து எல்லா வார்டுகளுக்கும் தண்ணீர் கிடைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையையும் பரிசீலனை செய்து அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி*

2013 ஏப்ரல் 26]

தேவைப்படுகின்றபட்சத்தில் நிச்சயமாக அதை அமைப்பதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கல்லுகுண்டம் பேரூராட்சியிலே, புதூர் என்ற கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில்லை. ஆகவே, அந்தப் பகுதியிலே தண்ணீர் சரியாக விநியோகம் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லுகுண்டம் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில்லை என்றும் அதனால் தண்ணீர் சரியாக விநியோகம் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது என்று கூறியிருக்கிறார். அப்படியானால், அங்கு தண்ணீர் வழங்கப்படுகிறதா, இல்லையா? அப்படி வழங்கப்படுகிறது என்றால் அந்தத் தண்ணீர் எப்படி வழங்கப்பட்டு வருகிறது என்பதைக் கூறியிருந்தால் அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அவசியமா, இல்லையா என்பதை நாங்கள் கூறமுடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விவரங்களைக் கூறவில்லை. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில்லையென்று சொன்னால், எல்லாப் பகுதிகளுக்கும் குடிதண்ணீர் வழங்குவதென்பது இயலாத காரியம். அப்படி இருக்கின்றபட்சத்தில் அதை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுரை வடக்குத் தொகுதி, செல்லூர் வடக்குப் பகுதியிலே குடிநீர்த் தொட்டி உடைந்ததால் 9, 40, 43 மற்றும் 44 ஆகிய 4 வார்டுகளில் குடிநீர் விநியோகம் தடைப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு புதிய குடிநீர்த் தொட்டியமைத்து தண்ணீர் தேக்கிக் கொடுத்தால் அங்கே இருக்கின்ற மக்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்பதைச் சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கின்ற தொட்டி பழுதடைந்திருக்கிறது என்று சொல்லி இருக்கின்றார்கள். நிச்சயமாக பழுதடைந்த அந்தத் தொட்டியை சீர் செய்வதற்கு வாய்ப்பு இருந்தால் சீர் செய்யப்படும். அவ்வாறு சீர் செய்ய முடியாத நிலை இருக்குமானால், புதியதாக ஒரு தொட்டியை அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராதாபுரம் தொகுதியில், திசையன்விளை, பனகுடி, வள்ளியூர் பேரூராட்சிகளில் மக்கள்தொகை பெருகிக்கொண்டே இருக்கிறது. இப்போது இருக்கின்ற நீர்த்தேக்கத் தொட்டிமூலம் அவர்களுக்குப் போதுமான தண்ணீர் கொடுக்க

2013 ஏப்ரல் 26]

முடியவில்லை. எனவே, அதிக அளவு கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அதற்கு நீர் ஆதாரமும் உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் குடிதண்ணீருக்காக பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது நகர்ப்புறங்கள் எல்லாம் கூடுதலான மக்கள்தொகை கொண்ட பகுதிகளாக உருவாகிக்கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில், எல்லா பகுதி மக்களுக்கும் குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அதோடு மட்டுமல்லாமல், இயற்கை பொய்த்தாலும் கடல்நீரை நன்னீராக்கி குடிதண்ணீர் வழங்க வேண்டும் என்று முடிவெடுத்து ஏற்கெனவே இதே மாமன்றத்தில் பேரவை விதி 110–ன்கீழ் கடல்நீரைக் குடிநீராக்கும் 150* mld *200* mld, *400* mld, *போன்ற திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளில் எங்கெல்லாம் குடிதண்ணீர் எடுக்க முடியும் என்பதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே கூடுதலாகக் குடிதண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 323, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*